5

من رآني في المنام فسيراني في اليقظة

**என்னைக் கனவில் கண்டோன்**
**என்னை விழிப்பில் காண்பான்!**

# யமன் போர்வைக்குள்

# நிலா


தொகுத்தோன்:
MH. அப்துர் றஹ்மான்
(ஆஷிகே றஸுல்)
BJM வீதி, காத்தான்குடி – 05
0773912367


## போர்வைக்குள்...


- முன்னுரை
- என்னுரை
- நானிலத்தில் நாயகம்
- பதினான்காம் பிறைச் சந்திரன்
- நபித்துவத்தின் முத்திரை
- தாஹா நபியின் தாடியின் அமைப்பு
- ஆருயிர் நபியின் ஆடை
- பச்சைப் போர்வைக்குள் சிவந்த ரோஜா
- நாயகத்தின் தொப்பி
- தலையில் கட்டிய தலைப்பாகை
- காஸிம் நபியின் காற்சட்டை
- சந்தன மேனியில் சட்டை
- நாயகம் அணிந்த லுங்கி
- சர்தார் நபியின் மேலுறை
- பாக்கியம் பெற்ற படுக்கை
- மோதிரத்தில் முத்திரை
- காதலரை சுமந்த காலணி
- புள்ளியிட்ட நிலா
- புனிதரின் புருவங்கள்
- நாயகத்தின் நெற்றி
- வீரத்தின் வீரர்
- காதலர்களின் ஹவ்ழுல் கவ்தர்
- சிரிப்பில் அழகர்
- குரலில் இனியவர்
- கண்மணி நபிகளாரின் கழுத்து

- மாநபியின் மார்பின் முடிகள்
- காமில் நபியின் கக்கம்
- முத்திரையிட்ட முதுகு
- குளிர்ந்த கைகள்
- நாயகத்தின் கால்கள்
- நபிகளாரின் பின்னங் கால்கள்
- நாயகத்தின் நடை
- ஆண்மையில் சிறந்தவர்
- திரையில்லா பார்வை
- மானிடம் காணாத மல-ஜலம்
- தோழரின் காதலில் தோழர்கள்
- காதலர்களின் காதல் கவிதைகள்
- அழகுக்கு ஆதாரம்
- எழிலின் பிறப்பிடம்
- மணம் கமழும் பூமான் முகம்காண
- என் கண்மணியே! இரசூலே
- ஆசைதான்! பேராசைதான்
- நாயகத்திற்கோர் காவியம்
- கவிதை நூலகமே! யாறஸூலல்லாஹ்!!
- நன்றியுரை




## முன்னுரை :

எங்கும் நிறைந்திலங்கும் வல்லவனாம் அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்தவனாகவும், பரிசுத்தத்திலும் பரிசுத்தமான உத்தமராம் நமது உயிரை விடவும் மேலான கண்மணி நாயகம் நபீ முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீதும், அவர்களின் பரிசுத்த குடும்பத்தார்கள், உற்ற தோழர்கள், அவர்களை அணுகளவும் பிசகாமல் நடந்த இறைநேசச் செல்வர்கள், ஷெய்குமார்கள், ஸாலிஹீன்கள் மற்றும் எனது ஷெய்குனா மிஸ்பாஹீ நாயகம் (தால உம்றுஹு) அன்னவர்கள்மீதும் என்றென்றும் ஸலவாத்தும் சலாமும் உண்டாவதாக. ஆமீன்!

## என்னுரை :

நமது உயிரை விடவும் மேலான கண்மணி நாயகம் நபீ முஹம்மது முஸ்தபா (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :
“என்னைக் குறித்து அறிவியுங்கள். அது சிறியதோர் செய்தியாயினுஞ் சரியே”

அறிவிப்பவர்கள் :
அப்துல்லாஹ் இப்னு அம்ர் (றழியல்லாஹு அன்ஹு)
நூல் : புகாரீ

நம் கண்மணி நாயகம் நபீ முஹம்மது முஸ்தபா (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் இத்திரு மொழியின்படி, கண்மணி நாயகம் நபீ முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பேரழகைப் பற்றி நான் படித்தறிந்த சில விஷயங்களைத் தொகுத்து ஒரு சிறிய புத்தகத்தை எழுத நாட்டம் கொண்டேன். அல்லாஹ் தஆலா இப் புத்தகத்தை எழுதுவதற்கான ஹிதாயத்தையும், அறிவையும், ஆற்றலையும் கொடுத்தான். அதனைக் கொண்டு இச்சிறிய புத்தகத்தை எழுதியுள்ளேன். அல்ஹம்துலில்லாஹ்.

கண்மணி நாயகம் நபீ முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தம்முடைய உம்மத்துக்கள்மீது நீங்காத பற்றும் பாசமும், கவலையும் கொண்டவர்களாக இருந்தார்கள். "இறைவனே! என் சமூகத்தார், என் சமூகத்தார்" எனக்கூறி அழுதவர்களாக இருந்தார்கள். இம்மையிலும் மறுமையிலும் அவர்களின் வாட்டம் போக்க நாட்டம் கொண்டவர்களாக இருந்தார்கள்.

ஆனால், உம்மத்துக்களில் ஒரு கூட்டத்தார் அன்னாரை கண்ணியப்படுத்துவதில் குற்றம் காண்கிறார்கள். அன்னார்மீது ஸலவாத்து ஓதுவதில் குற்றம் காண்கிறார்கள். அன்னாரின் நேரிய வழிமுறைகளில் குற்றம் காண்கிறார்கள். மனிதர்கள்தான் இவ்விதம் குற்றம் காணக்கூடியவர்களாக இருக்கிறார்கள்!

ஆனால் அல்லாஹுத் தஆலாவோ தன்னுடைய ஹபீபை ஒவ்வொரு விஷயத்திலும் கண்ணியப்படுத்தி சிறப்பித்திருக்கிறான். யாருக்கும் வழங்காத பல்வேறு அந்தஸ்துக்களை வழங்கி சிறப்பித்திருக்கிறான். அன்னார்மீது தன்னுடைய அருளையும், அன்பையும் பொழிந்து சிறப்பித்திருக்கிறான். இப்படியாக சிறப்புக்களையெல்லாம் சிறப்பாக வழங்கி சிறப்பித்திருக்கிறான்.

அல்லாஹுத் தஆலா நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு வழங்கிய அழகு மற்றும் சிறப்புக்களில் சிலவற்றைத்தான் இப் புத்தகத்தில் நான் தொகுத்தெழுதியுள்ளேன். அல்ஹம்துலில்லாஹ்.

இந்நூலில் பல்வேறு ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றை பல்வேறு ஹதீஸ் நூல்களிலிருந்து எடுத்து பயன்படுத்தியுள்ளேன். அவ்விதம் இப்புத்தகத்தில் நான் பயன்படுத்தியுள்ள ஹதீஸ் நூல்களின் மூல ஆசிரியர்களுக்கும், மொழிபெயர்ப்புச் செய்தவர்களுக்கும், பதிப்பித்தவர்களுக்கும் எனது நன்றியினை காணிக்கையாக்குகிறேன். மேலும் அன்னவர்களின் ஹக்கில் துஆ செய்தவனாகவும் இருக்கின்றேன்.



இப்புத்தகத்தில் என்னையறியாமல் ஏதேனும் குறைகள் ஏற்பட்டிருந்தால் அவற்றை சுட்டிக்காட்டி, திருத்திக் கொள்ள ஒரு வாய்ப்பினை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அல்லாஹுத் தஆலா கண்மணி நாயகம் நபீ முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பொருட்டால், இச்சிறிய புத்தகத்தைக் கொண்டு நம் அனைவருக்கும் பயன் கிடைக்கும்படி செய்வானாக. மேலும் குறைவின்றி இம்மை மறுமை பேறுகளையும் தந்தருள்வானாக. ஆமீன்!

(தொகுத்தோன்)

## நானிலத்தில் நாயகம் :

கண்மணி நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை அல்லாஹ் நம்மிடம் ஒரு மனிதப் புனிதராகவும், நற்செய்தி கூறுபவர்களாகவும், பிரகாசிக்கும் கலங்கரை விளக்காகவும் அனுப்பி வைத்தான். அவர்களின் ஒவ்வொரு அங்க அசைவும் நமக்கு ஓர் அழகிய முன்மாதிரியாகும். எனவே, அவர்களுடைய ஒவ்வொரு சொல்லும், செயலும்கூட நமக்கு விமோசனம் தரும் ஆற்றல் பெற்றுள்ளன.

கண்மணி நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எப்படி குடும்பம் நடத்தினார்கள்? எப்படி சாப்பிட்டார்கள்? எப்படித் தூங்கினார்கள்? எப்படி உடை உடுத்தார்கள்? எப்படி திருமுடி வளர்த்தார்கள்? எப்படி உட்கார்ந்தார்கள்? எப்படி நடந்தார்கள்? என்பதையெல்லாம் நம் முன்னோர்கள் நமக்கு விளக்கிக் காட்டியுள்ளார்கள்.

கண்மணி நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எத்தகைய தோற்றமுள்ளவர்கள் என்பதற்கு நம்மிடம் அவர்களின் உருவச் சிலையோ, உருவப் படமோ இல்லை.

ஆனாலும் அவர்களின் திரு உருவத் தோற்றத்தை நம் முன்னோர்கள் எழுத்துருவில் சித்தரித்துக் காட்டியதை வைத்து நம்மனக் கண்முன் அவர்களுடைய தோற்றத்தைப் படம் பிடித்துப் பார்த்துக் கொள்வது எளிதாகும். அந்த வகையில் அவர்களின் திரு உருவத் தோற்றத்தை ஓரளவு எழுத்தில் வடித்துக் காட்டுகிறோம்.

## பதினான்காம் பிறைச் சந்திரன் :

கண்மணி நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அதிக உயரமுமில்லாது, அதிக குள்ளமாயுமில்லாது மத்திமமான நிலையிலிருந்தார்கள். தலை பெரிதாக இருந்தது. அவர்களின் தலை முடி அடர்த்தியாயிருந்தது. அந்த முடிகளில் 20 அல்லது 25 திரு முடிகள் வெள்ளையாக இருந்தன. அவர்களின் திருமுகம் வட்டமாகவும், அழகு நிறைந்ததாகவும், அருள் மிகுந்ததாகவும் இருந்தது. பதினான்காம் பிறை போன்று அவர்களின் திருமுகம் தோற்றமளித்தது என்று அவர்களைப் பார்த்த பலர் தெரிவித்துள்ளனர். அவர்களின் வியர்வையில் ஒரு வகையான சுகந்த வாசம் வீசிக் கொண்டிருந்தது.

## நபித்துவத்தின் முத்திரை :

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் இரு தோள்களின் நடுவில் வலது பக்க ஓரமாக ரோஜா நிறத்தினாலான புறா முட்டையின் வடிவத்தில் ஒரு சதைத்துண்டு துருத்திக் கொண்டிருந்தது. அதன்மேல் மெல்லிய கோட்டில் “முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்” என்ற எழுத்துக்கள் இலேசாகத் தெரிந்து கொண்டிருந்தன.

## தாஹா நபியின் தாடியின் அமைப்பு :

கண்மணி நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தாடியை வளர்த்து, மீசையைக் கத்தரித்துக் கொண்டிருந்தார்கள்.



அடர்த்தியான அவர்களின் தாடி முடியின் நீளம் அளவிற்கு மீறி நீண்டு விட்டால் அதனைக் கத்தரித்து விடுவார்கள். தாடியை சிரைப்பது இணை வைப்பவர்களின் வழக்கம் என்று நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

பொதுவாக தாடி வளர்ப்பது எல்லா நபிமார்களின் பழக்கமாயிருந்து வந்துள்ளது. தாடி வைத்திருப்பவர்கள் ஒரு கூட்டமாக நின்றால் அந்தக் காட்சி பார்ப்பதற்கே மிக அழகாக இருக்கும்.

## ஆருயிர் நபியின் ஆடை :

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எப்பொழுதுமே மிகச் சாதாரண உடைகளை அதிகம் விரும்பி உடுத்திக் கொள்வார்கள். இடையில் ஒரு லுங்கி, ஒரு சட்டை, அதற்கு மேலாக ஒரு ஜுப்பா, ஒரு போர்வை, ஒரு கம்பளி ஆகியனவே அவர்களின் வழக்கமான ஆடைகளாகும். பச்சை நிற ஆடைகளை நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அதிகம் விரும்புவார்கள். அந்த ஆடைகளில் பல ஒட்டுக்கள் போடப்பட்டிருக்கும்.

## பச்சைப் போர்வைக்குள் சிவந்த ரோஜா :

“யமன் நாட்டுப் போர்வை” என்று அந்தக் காலத்தில் மிகவும் அதிகம் புழக்கத்திலிருந்தது. அதன்மீது பச்சை சிவப்புக் கோடுகள் போடப்பட்டிருக்கும். வெறும் சிவப்பு நிற ஆடைகளை நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வெறுத்து வந்தார்கள்.

## நாயகத்தின் தொப்பி :

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அணிந்து வந்த தொப்பிகள் தலையை ஒட்டினாற் போலவே இருக்கும்.

உயரமான தொப்பிகளை நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உபயோகித்ததில்லை. அவர்களின் தோழர்கள் உபயோகித்து வந்த தொப்பிகளும் தலையை ஒட்டியே இருந்தன.

## தலையில் கட்டிய தலைப்பாகை :

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தலையில் தொப்பி வைத்த பிறகுதான் அதன்மீது தலைப்பாகை கட்டிக் கொள்வார்கள்.

தொப்பியில்லாது தலைப்பாகை மட்டும் கட்டும் பழக்கம் இணை வைப்பவர்களிடமிருந்து வந்தது.

## காஸிம் நபியின் காற்சட்டை :

மினா கடை வீதியில் "பாஜாமா" (காற்சட்டை) விற்கப்படுவதைக் கண்ட நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "வெட்கஸ்தலத்தை மறைக்க சிறந்த ஆடை" என்று பாராட்டி வாங்கவும் செய்தார்கள். ஆனால், அதை உபயோகித்ததற்கான ஆதாரமில்லை.

## சந்தன மேனியில் சட்டை :

இதன் அமைப்பு நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு மிகப் பிடித்ததாயிருந்தது. இதில் பக்கட் மார்பின்மீது தைக்கப்பட்டிருந்தது. சில சமயங்களில் அதிலுள்ள பொத்தான்களை உபயோகிக்க மாட்டார்கள்.

## நாயகம் அணிந்த லுங்கி :

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கரண்டைக் கால் தெரியும் படியே லுங்கியைக் கட்டுவார்கள். நடந்தால் பின்னங்கால் தெரியும்.



## சர்தார் நபியின் மேலுறை (ஸாக்ஸ்) :

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் காலுறையும் அணிவார்கள். வுழூச் செய்யும்போது அதன்மேல் "மஸ்ஹு" செய்து கொள்வார்கள்.

## பாக்கியம் பெற்ற படுக்கை :

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் படுக்கை ஈத்தமர இலையைக் கொண்டு முடையப்பட்டதாக இருந்தது. தோலினாலான தலையணை இருந்தது. அதற்குள் பேரீத்த சருகுகள் நிரப்பப்பட்டிருக்கும்.

## மோதிரத்தில் முத்திரை :

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வெள்ளியினாலான மோதிரத்தை அணிந்திருந்தார்கள். அதன்மீது "முஹம்மதுர் றஸூலுல்லாஹ்" என்ற சொற்கள் மூன்று வரிசைகளாகப் பொறிக்கப்பட்டிருந்தன. அரசர்களுக்குக் கடிதங்கள் எழுதப்படும் பொழுது முத்திரை இடுவதற்காக இதனைப் பயன்படுத்தி வந்தார்கள்.

## காதலரை சுமந்த காலணி :

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அணிந்து வந்த காலணிகள் கீழே பட்டையாகவும், மேலே இரு வார்களும் கொண்டு அமைந்திருந்தன. அந்த இரு வார்களிலும் தனது புனிதமான கால் விரல்களை மாட்டிக் கொள்வார்கள்.

## புள்ளியிட்ட நிலா :

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் கண்கள் சற்று பெரிதாக இருந்தன. விழிகளில் கறுமையும் வெளிர் சிவப்பும் கலந்திருந்தன.

அவர்களின் கண்களில் ஒரு தனிப் பிரகாசம் ஜொலித்துக் கொண்டிருந்தது. அவர்களின் கண்களை நேருக்கு நேராகப் பார்ப்பவர்களின் கண்கள் கூசும்.

## புனிதரின் புருவங்கள் :

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் புருவங்கள் அடர்ந்திராது அரைப் பிறை வடிவில் அழகாக நீண்டு அமைந்திருந்தன. அவர்களின் இரு புருவங்களிடையே இடைவெளி இருந்தது.

## நாயகத்தின் நெற்றி :

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நெற்றி அகன்றிருந்தது. அவர்கள் ஆச்சரியப்படும் சமயத்தில் அவர்களின் நெற்றி சற்று உயர்ந்து கம்பீரமாகக் காட்சியளிக்கும்.

## வீரத்தின் வீரர் :

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மார்பு அகன்றிருந்தது. அகன்ற மார்பு கொண்டவர்களை வீரர்களென்றும், குறுகிய மார்புள்ளவர்களைக் கோழைகள் என்றும் அக்கால அறபிகள் கூறி வந்தனர். இக் காலத்தில்கூட ஆணுக்கழகு அகன்ற மார்பு என்று கூறப்படுவதுண்டு.

## காதலர்களின் ஹவ்ழுல் கவ்தர் :

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் புனித உமிழ்நீர் ஓர் அபூர்வ மருந்தாக இருந்தது. ஒரு தடவை ஹஸ்றத் அலீ (றழியல்லாஹு அன்ஹு) அவர்களுடைய கண் வலியை இந்த உமிழ் நீர்தான் குணப்படுத்தியுள்ளது. ஹஸ்றத் அனஸ் (றழியல்லாஹு அன்ஹு) அவர்களின் கிணற்று உவர்ப்பு நீர் இனித்ததற்கும், ஹஸ்றத் இமாம் ஹஸன் (றழியல்லாஹு அன்ஹு) அவர்களின் பசியைப் போக்குவதற்கும், வற்றியிருந்த கிணற்று நீர் ஊற்றாய் வந்ததற்கும் நபிகளாரின் உமிழ் நீர்தான் காரணமாயிருந்தது.



## சிரிப்பில் அழகர் :

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எப்பொழுதும் புன் சிரிப்புடன்தான் காணப்படுவார்கள். சில சமயங்களில் மட்டும் கடைவாய்ப் பற்கள் தெரியச் சிரித்துள்ளார்கள். வெடிச் சிரிப்பு, விழுந்து விழுந்து சிரிப்பது, சப்தத்துடன் சிரிப்பது போன்றவை அவர்களிடம் காணப்படவில்லை.

## குரலில் இனியவர் :

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு இருந்த இனிமையான குரல் நபிமார்கள் உட்பட எந்த மனிதருக்கும் இருக்கவில்லை. “கணீர்” என்று ஒலிக்கும் அந்தச் சொற்கள் சபையிலிருப்போர் அனைவரின் காதுகளிலும் ஒலிக்கும் சக்தி பெற்றிருந்தது. இறுதி ஹஜ்ஜின் பொழுது அவர்களின் பேருரையை அரபா மைதானத்தில் சுமார் ஒன்றரைகால் இலட்சம் மக்கள் நன்கு விளங்கக் கேட்டார்கள் என்றால் அந்தக் குரலின் அபார சக்தியை என்னென்று கூறுவது?.

## கண்மணி நபிகளாரின் கழுத்து :

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் கழுத்து மிக அழகாகவும், வெண்மையாகவும் இருந்தது. மான் குட்டியின் கழுத்து எவ்வளவு மென்மையாகவும் கவர்ச்சியாகவும் இருக்குமோ அதே மாதிரியாக இருந்தது நபிகளாரின் கழுத்தும்.

## மாநபியின் மார்பின் முடிகள் :

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மார்பின் முடி அடர்த்தியாக இல்லாது மார்பின் நடு பாகத்திலிருந்து தொப்புள்வரை இலேசான முடிகள் சீராக இருந்தன. மார்பின் இரு பகுதியும் முடியில்லாதிருந்தது.

## காமில் நபியின் கக்கம் (அக்குள்) :

பொதுவாக எல்லோருக்கும் உடலின் நிறம் கக்கத்திலிராது சற்று மாறுபட்டே இருக்கும். ஆனால் நபிகளாரின் கக்கம் உடல் நிறத்தைப் போன்றே வெண்மையாக இருந்தது. அவர்களின் கக்கத்தில் முடி முளைக்கவில்லை.

## முத்திரையிட்ட முதுகு :

நபீ (ஸல்லல்லாஹுˇ அலைஹி வஸல்லம்) அவர்களின் முதுகு வெண்மையாகவும், மிகவும் அழகானதாகவும் இருந்தது.

## குளிர்ந்த கைகள் :

நபீ (ஸல்லல்லாஹுˇ அலைஹி வஸல்லம்) அவர்களின் கை, உள்ளங்கை, மணிக்கட்டு, விரல்கள் எல்லாமே மிக அழகாகவும் வெண்மை நிறத்துடனுமிருந்தன. அவை தொட்டுப் பார்க்க மிகவும் மிருதுத் தன்மையுடனிருந்தாலும், மிகவும் வலுவாக இருந்தன. பிறர்மீது அவை படும் பொழுது குளிர்ந்திருந்ததைப் பலர் அனுபவித்துள்ளனர்.

## நாயகத்தின் கால்கள் :

நபீ (ஸல்லல்லாஹுˇ அலைஹி வஸல்லம்) அவர்களின் கால்கள் மிருதுவாக இருந்தன. பாதங்களும், கால்களின் விரல்களும் மிக அழுத்தமாக இருந்தன. இரண்டு கால்களும், அவற்றின் விரல்களும் எந்தக் குறைவுமின்றி சீராக இருந்தன.

## நபிகளாரின் பின்னங் கால்கள் :

நபீ (ஸல்லல்லாஹுˇ அலைஹி வஸல்லம்) அவர்களின் இரு பின்னங் கால்களும் தடித்திராது சதை பிடிப்பு அதிகமின்றி இருந்தன. நிறம் வெண்மையாக இருந்தது.



## நாயகத்தின் நடை :

நபீ (ஸல்லல்லாஹுˇ அலைஹி வஸல்லம்) அவர்கள் நடக்கும் பொழுது கீழ் நோக்கியவாறே நடப்பார்கள். மேட்டிலிருந்து கீழே இறங்குவதைப் போன்றே நடப்பார்கள். பூமியின்மீது முழுப் பாதத்தையும் பதிய வைத்து நடப்பார்கள்.

## ஆண்மையில் சிறந்தவர் :

நபீ (ஸல்லல்லாஹுˇ அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு 11 மனைவிமார்கள் இருந்தனர். அவர்கள் விரும்பினால் அத்தனை மனைவிமார்களுடனும் பேசி வருவார்கள். அவர்களுக்கு அல்லாஹுˇ தஆலா 100 ஆண்களுக்குத் தேவையான வீரியத்தை அருளியிருந்தான். அவர்களுக்கு என்றும் 'ஸ்கலிதம்' ஏற்பட்டதில்லை. கனவில் விந்து வெளிப்பட்டதில்லை.

## திரையில்லா பார்வை :

நம் கண்மணி நாயகம் நபீ (ஸல்லல்லாஹுˇ அலைஹி வஸல்லம்) அவர்களின் பார்வைக்குத் தனி ஆற்றலுண்டு!

பக்கத்திலுள்ளதையே கண்ணாடி போட்டுப் பார்க்கும் நம் பார்வை போன்றதல்ல அவர்களின் முபாறக்கான பார்வை!

சல்மான் பாரிஸீ (றழியல்லாஹுˇ அன்ஹுˇ) ஒரு நாள் சஹாபாக்களுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

நாயகத்திருமேனி அவ்விடம் வருகை தரவே பேச்சை நிறுத்திவிட்டு அமைதியாக இருக்கிறார்கள்.

பெருமான் நாயகம் கேட்டார்கள் : 'நான் வந்ததும் பேச்சை நிறுத்தி விட்டீர்களே, என்ன காரணம்?'

சல்மான் பாரிஸீ (றழியல்லாஹு அன்ஹு) சொல்வார்கள் 'நாயகமே, நீங்கள் வந்ததால் உங்களுக்குக் கண்ணியம் கொடுக்கும் பொருட்டு பேச்சை நிறுத்தினோம்' என்று.

றஸூலுல்லாஹ் சொன்னார்கள் : 'நீங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது "றஹ்மத்" இறங்குவதை நான் பார்த்தேன். ஆதலால் உங்களோடு சேர்ந்து அந்த றஹ்மத்தில் நனைந்து கொள்ள ஆசைப்பட்டேன்' என்கிறார்கள்.

"றஹ்மத்" இறங்குவதைக்கூட பார்க்கும் ஆற்றல் நம் பெருமான் நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு உண்டு என்ற உண்மை இந்த ஹதீஸின் மூலம் விளங்குகிறது!

நம்மைப் போன்ற மனிதர் என்று நினைத்தால் நம்மில் யாராவது ஒருவர் "றஹ்மத்" இறங்குவதைப் பார்த்திருக்க வரலாறு உண்டா? பார்க்க முடியுமா?

அதேபோல் காய்ச்சல்கூட கண்மணி றஸூலுல்லாஹ் விடம் அனுமதி கேட்டு வந்திருக்கிறது.

காய்ச்சல் என்ற நோயைக் கண்ணால் யாராவது பார்த்து பேசியதாக வரலாறு உண்டா?
எந்த மருத்துவ சிகாமணியான வல்லுனராவது பார்த்ததுண்டா?

குபா எனும் ஊரிலே காய்ச்சல் நுழைவதற்குமுன் பெருமானாரிடம் அனுமதி கேட்டதாக ஹதீஸ்கள் சொல்கின்றன.

உன் பணி என்ன? என்று கேட்ட றஸூலுல்லாஹ்விடம் காய்ச்சல் சொன்னது : 'ரத்தத்தை உறிஞ்சிக் கொள்வேன். சதைத் துண்டுகளைக் கசக்குவேன். இதுதான் என் வேலை' என்றது காய்ச்சல்!

இதனால் என் உம்மத்துக்கு என்ன கிடைக்கும்?
காய்ச்சல் சொன்னது 'உம்முடைய உம்மத்துக்குப் பாவங்கள் மன்னிக்கப்படும்' என்றது.



பாவங்கள் மன்னிக்கப்படுவது நல்லதுதானே... என அனுமதி கொடுக்கவே, ஊர் முழுக்கக் காய்ச்சல் தொற்றியதாக ஹதீஸ் சொல்கிறது!

குபா வாசிகள் எல்லாம் வந்து நாயகத்திடம் 'இப்படி ஒட்டுவாரொட்டி நோய் ஒன்று எங்களை வேதனைப் படுத்துகிறது. சரி செய்யுங்கள்' என்று முறையிட...

நான் துஆ செய்தால் உடனே சுகம் கிடைத்துவிடும்.
சுகம் வேண்டுமா...?
உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமா...? எனக் கேட்க,

எங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும் நாயகமே என்று ஒருமித்துச் சொல்கிறார்கள்.

அப்படியானால் காய்ச்சலை சகித்துப் பொறுமையாக இருங்கள் என அனுப்பி வைக்கிறார்கள்.

அப்படியானால் பெருமானாரின் பார்வையின் ஆற்றலின் அலாதிதான் என்ன?

## மானிடம் காணாத மல-ஜலம்:

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மல ஜலத்தை யாரும் பார்த்ததில்லை. அவர்களின் மல ஜலத்தை பூமி விழுங்கி விடுவதாக நபிகளாரே கூறியுள்ளார்கள். அவை பட்ட இடம் நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது.

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைத் தவிர இப்பரந்த உலகில் எந்த ஒரு தனி மனிதரைப் பற்றிய இத்தகைய தகவல்களை யாரும் அறிவிக்கவில்லை. நபிகளாரைப் பற்றிய இத்தகைய இன்னும் பல தகவல்கள் ஆதாரத்துடன் பல நூறு உள்ளன.

## தோழரின் காதலில் தோழர்கள் :

தங்களைவிட எழில் மிக்கவரை
எந்தக் கண்ணும் பார்க்கவில்லை!

தங்களைவிட அழகானவரை
எந்தப் பெண்ணும் பெற்றெடுக்கவில்லை!

தாங்கள் எவ்வித குறையுமின்றி
பரிசுத்தமாகப் படைக்கப்பட்டிருக்கிறீர்கள்!

தாங்கள் விரும்பியவாறே
படைக்கப்பட்டதைப் போன்று இருக்கின்றீர்கள்!

என்று நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் ஆஸ்தான கவிஞரான நபித் தோழர் ஹஸ்ஸான் இப்னு தாபித் (றழியல்லாஹு அன்ஹு) அவர்கள் நபிகளாரைப் புகழ்ந்து பாடியுள்ளார்கள்.

(தப்ஸீர் றூஹுல் மஆனி சூறதுல் யூனுஸ் 2வது வசனத்தின் விளக்கவுரை)

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹிஜ்ரத்தின் நிமித்தம் மதீனா மாநகருக்குள் நுழைந்த நேரத்தில்...

அன்ஸாரீ ஸஹாபாத் தோழர்கள் அனைவரும் ஒன்று திரண்டு நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை ஊர்வலமாக அழைத்துச் செல்லும்போது, "தனிய்யத்துல் வதாஉ" என்ற இடத்திலிருந்து...

ஒரு பூரண சந்திரன் எங்களுக்கு மத்தியில் உதயமாகிவிட்டது.
அல்லாஹ்வின்பால் அழைப்பவர்கள் அழைக்கும் காலமெல்லாம்...
அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிப்பது எங்களின் மீது கடமையாகிவிட்டது!



எங்களில் அனுப்பி வைக்கப்பட்ட நாயகம் அவர்களே!
கட்டுப்பட்டு நடக்கப்படும் மார்க்கத்தின் காரியத்தை
எங்களுக்குக் கொண்டு வந்தீர்கள்!

என்ற கவியைப் பாடி புகழ்ந்தார்கள்

(பத்ஹுல் பாரீ)

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்
சூரியன் சந்திரனைவிட மிக பிரகாசமானவர்களாகும்!

அவர்களின் மூன்றில் ஒரு பங்கு கற்பூரம்!
நான்கில் ஒரு பகுதி அம்பர்!
ஆறில் ஒரு பகுதி மரகதம்!
மீதப் பகுதி மாணிக்கம்!
அவர்களின் உடல் வாசனை கஸ்தூரியாக இருக்கும்!

என்று ஹஸ்ஸான் இப்னு தாபித் (றழியல்லாஹு அன்ஹு) அவர்கள் நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் புகழ்ந்து கூறியுள்ளார்கள்.

மனாஇஹுல் அன்வார் பீ மதாயிஹிர் றஸூலி வல் அப்றார்,
பக்கம் : 285

கண்மணி நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் உள்ளங்கையைவிட மென்மையான பட்டையோ, (பூ வேலைப்பாடு செய்யப்பட்ட) தூய்மையான பட்டையோ நான் தொட்டதில்லை. நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் (உடல்) மணத்தைவிட சுகந்தமான ஒரு நறுமணத்தை நான் நுகர்ந்ததேயில்லை.

வேறு சில அறிவிப்புகளில் "உடல் மணம்" என்பதற்கு பதிலாக "வியர்வை" என்று இடம் பெற்றுள்ளது.

ஹழ்றத் அனஸ் (றழியல்லாஹு அன்ஹு)
நூல் : புகாரீ 3561

நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு பாதையில் சென்றிருக்க அதே பாதையில் மற்றொருவர் செல்கிறார் என்றால், அவர் அவ்வழியால் நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சென்றுள்ளார்கள் என்பதை அவர்களது வாடையின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

(நூல் : மிஷ்காத், தாரமி)

அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியதாவது, அல்லாஹ்வின் தூதர் நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒளிரும் வெண்ணிறம் கொண்டவர்களாக இருந்தார்கள்.

(நூல் : முஸ்லிம் 4654)

ஹழ்ரத் அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்கள் : நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அகலமான கரமுடையவர்கள். முற்றிலும் சிவந்த நிறம் கொண்டவர்கள் அல்லர். அவர்களின் உயிர் பிரியும்போது தாடியிலும் தலையிலும் சேர்த்து இருபது வெள்ளை முடிகள்கூட இல்லை. நரை இரு பொட்டுப் பகுதியில் (கிருதாப் பகுதியில்) மட்டும் இருந்தது. தலையிலும் மிகக் கொஞ்சமாக நரைமுடி இருந்தது.

(நூல் : புகாரீ, முஸ்லிம்)

ஹழ்ரத் அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியதாவது : அல்லாஹ்வின் தூதர் நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வெளிப்படையாகத் தெரியும் அளவுக்கு மிக உயரமான வர்களாகவும் இல்லை. குட்டையானவர்களாகவும் இல்லை. சுத்த வெள்ளை நிறமுடையவர்களாகவும் இல்லை. மா நிறம் கொண்டவர்களாகவும் இல்லை.

(நூல் : முஸ்லிம் 4685)

ஹழ்ரத் அபூ உபைதா இப்னு முஹம்மத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ருபய்யிஃ (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடத்தில், ‘கண்மணி நாயகம் நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களைப் பற்றி எனக்குக் கூறுங்கள்’ என்று கேட்டேன்.



அதற்கவர்கள் : ‘அருமை மகனே! அருமை நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை நீ பார்த்தாயானால், சூரியன் உதிப்பதாகவே காண்பாய் என்று கூறினார்கள்.

(நூல் : தாரமி 60, மிஷ்காத் 5793)

பராஉ பின் ஆஸிப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியதாவது : அல்லாஹ்வின் தூதர் நபீ (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைவிட நீண்ட முடி வைத்து, சிவப்பு நிற அங்கி அணிந்திருந்த அழகான ஒருவரை நான் கண்டதேயில்லை. அவர்களது தலைமுடி தோள்களைத் தொட்டுக் கொண்டிருந்தது. (விரிந்த முதுகும் பரந்த மார்பும் கொண்டு) அவர்கள் இரு தோள்களுக்கிடையே அதிக இடைவெளி உள்ளவர்களாக இருந்தார்கள். அவர்கள் அதிக உயரமுடையவர்களாகவும் இருக்கவில்லை, குட்டையானவர்களாகவும் இருக்கவில்லை. நடுத்தரமுடையவர்களாகவே இருந்தார்கள்.

(நூல் : முஸ்லிம் 4664, 4665)

ஹழ்ரத் அபூ ஹுரைறா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள் : நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களை விட மிக அழகான எந்த வஸ்துவையும் நான் கண்டதில்லை. அவர்களின் முகத்தில் சூரியன் ஓடிக் கொண்டிருப்பதைப் போன்று இருப்பார்கள்.

(நூல்கள் : திர்மிதி 3648, மிஷ்காத் 5795,
முஸ்னத் அஹ்மத் பாகம் 2 பக்கம் 350)

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை யாராவது அழைத்தால் திரும்பும்போது முகத்தை மட்டும் திருப்பாமல் முழுமையாகத் திரும்புவார்கள். அவர்களின் பார்வை கீழ் நோக்கியே (பூமியைப் பார்த்தே) இருக்கும். வானத்தைப் பார்ப்பதை விட பூமியைப் பார்ப்பதில் அவர்களது பார்வை அதிகமாக இருந்தது. தன் தோழர்களை முன்னால் செல்லவிட்டு பின்னால் வருவார்கள். சந்திப்பவர்களை ஸலாம் கூறி பேச ஆரம்பிப்பார்கள். வுழூச் செய்யும் போதும், தலைவாரும் போதும், செருப்பணியும் போதும் வலப்புறத்திலிருந்து ஆரம்பிப்பதை விரும்புவார்கள்.

அவர்களது தலை முடியிலும் தாடியிலும் சில முடிகள் நரைத்திருந்தன. சுமார் இருபது முடிகளே நரைத்திருந்தன. “இஸ்மித்” என்ற சுர்மாக்கூடு ஒன்று இருந்தது. ஒவ்வொரு இரவிலும் இரு கண்களிலும் மூன்று தடவைகள் சுர்மா இட்டுக் கொள்வார்கள்.

‘இஸ்மித் சுர்மா இடுங்கள். அது பார்வையைக் கூர்மையாக்கும். இமைகளின் முடியை வளரச் செய்யும்’ எனவும் கூறுவார்கள். போர்வையும், சட்டையும் அவர்களது ஆடைகள். சட்டையை அதிகமாக விரும்புவார்கள். அவர்கள் அணியும் காலணி (செருப்பு)களுக்கு இரு வார்ப்பட்டைகள் இருந்தன. வெள்ளியினாலான மோதிரம் செய்து வலது கரத்தில் அணிந்திருந்தார்கள். அதில் முஹம்மது என்று ஒரு வரியும், றஸூல் என்ற ஒரு வரியும், அல்லாஹ் என்ற ஒரு வரியும் செதுக்கப்பட்டிருந்தது.

கடிதங்கள் எழுதும்போது இதனை முத்திரையாகப் பயன்படுத்துவார்கள். பெரும்பாலான சிரிப்பு புன்னகையாக இருக்கும். பேசும்போது அடுத்தவர்கள் மனனம் செய்யும் வண்ணம் இடைவெளியிட்டுத் தெளிவாகப் பேசுவார்கள். அவசியமில்லாமல் பேசமாட்டார்கள். அன்போடு பேசுவார்கள். அடுத்தவர்களை வெருண்டோடச் செய்யமாட்டார்கள். அறையிலிருக்கும் கன்னியரைவிட அதிகமாக வெட்கப்படுவார்கள்.

(நூல் : ஷமாயில் திர்மிதி)

## காதலர்களின் காதல் கவிதைகள் :

## அழகுக்கு ஆதாரம் :

யாறஸூலல்லாஹ்!
தங்கள் அழகை ஒப்பிட இரு உலகிலும் எதுவுமில்லை நாயகமே!
ஏனென்றால் அது அழகாயிருக்க ஆதாரமே தாங்கள்தான்
யாறஸூலல்லாஹ்!!
தங்களை வர்ணிக்க வார்த்தையில்லை!
தங்கள்மேல் ஸலவாத் சொல்வதைத் தவிர
யா ஹபீபல்லாஹ்!!

(ஹுஸைன் பிலாலி)



## எழிலின் பிறப்பிடம் :

எழிலின் பிறப்பிடமே!
இரு உலகத்தின் அனைத்து அழகின் இருப்பிடமே!

யூஸுப் (அலைஹிஸ் ஸலாம்) அவர்களின்
அழகைக் கண்ட பெண்கள்...
பழத்திற்கு பதில் விரல்களை அறுத்துக் கொண்டார்கள்!

யாஹபீபே!
அவர்கள் உங்கள் பேரழகைக் கண்டிருந்தால்...
அவர்கள் தங்கள் கைகளையும் கழுத்துகளையுமல்லவா
அறுத்திருப்பார்கள்!

யாஹபீபே!
கொஞ்சம் கனவிலேனும் காட்சி தாருங்கள்.
கேட்பவர்க்கு இல்லையென்று சொல்லும்
மனதில்லாத தயாளரே!
அனைத்திடுங்கள் நாயகமே!!

(ஹுஸைன் பிலாலி)

## மணம் கமழும் பூமான் முகம்காண...

தங்கள் முகம்காண
துடிக்கின்றேன் நாயகமே!

தங்கள் அழகு முகம்காண
ஏங்குகிறது என் உள்ளம் நாயகமே!

நான் பிறந்த பிறப்பிற்கே பயன் ஏது
தங்கள் முழுமதி காண்பதே என் நாயகமே!

என் கண்கள் தங்களை அல்ல
தங்கள் பாதணியைகூட காண
அருகதை அற்றது...
என் நாயகமே!

இரக்க உள்ளம் உங்களது
என் நாயகமே..!

தயவுடன் எனைக் கூர்ந்து இந்த
பேதை ஆசையை தீர்த்து விடுங்கள்
என் நாயகமே..!

தங்கள் இனிய அன்பு பார்வைபெற
பேதை தவிக்கின்றேன்...
என் நாயகமே!!

இந்த பாவையின் பாவம் மன்னித்து
தங்கள் புனித காலடியில் இடம் தந்தருள வேண்டும்
என் நாயகமே..!

தங்கள் கஸ்தூரி மணம் கமழும்
காலடியில் இடம் தந்தால்...
புனித சுவர்க்கம் இழக்கத் தயார்
என் நாயகமே..!

இனிய சுவர்க்கம் வேண்டாம்!
தங்கள் கருணை முகமும்
புனித காலடியும் எனக்குப் போதும்
என் நாயகமே..!

பாரினில் பிறந்த இந்தப் பாவிக்கு
இந்த வரம் போதும்
என் நாயகமே...!

தங்களையன்றி உதவிட இந்த
வையகத்தில் எவருமில்லை
என் நாயகமே..!

என் இறுதி மூச்சை தங்கள் ரவ்ழாவிலே விட
என் உள்ளம் துடிக்கிறது
என் நாயகமே..!



நன்நீதரே! தங்களையன்றி சேர்த்தணைப்பார்
எனக்கு வேறு யாருமில்லை
என் நாயகமே..!

என் உள்ளத்தில் உதித்த மலர்களை
தங்கள் பாதம் சமர்ப்பித்தேன்
என் நாயகமே..!

இந்தப் பாவையின் ஏக்கம் தீருவது
என் நாளோ..? என் கண்மணியே!!
என் நாயகமே..!!

(ஷர்மிளா காதிர்)

## என் கண்மணியே! இரசூலே...

என் கண்மணியே...! இரசூலே...!
கவி மழையால் உங்களை புகழ்பாட வந்துள்ளேன்!

எத்தனை கோடி கவிஞர்கள் திரண்டாலும்
முடியாத தங்கள் புகழ்பாட
இந்த பேதை பேராசைப்பட்டேன்!

இதோ புகழை புகழக் கோல் ஏந்தினேன்...
என் பேனாவும் வெட்கித் தலை குனிந்தது!

முடியாமல் திண்டாடினேன்...
ஆனாலும் என் ஆருயிரை நினைக்கும்போது
அருவியாய் உள்ளத்தில் பொங்கிவரும்
பாசத்தை கவி வடிவில் கொட்டினேன்.

கண்ணியத்தின் கோட்டையே!
அகிலத்தின் அருட்கொடையே!
ஞானத்தின் திறவுகோலே!

ஈமானிய உதிரத்தால் எங்கள்
கல்புகளை நிரப்பிய றஸூலே!

உலகத்தின் மாமணியே!
ஒப்பற்ற கோமானே!

ஏழையின் சிரிப்பில் இறை...
சந்தோசத்தைக் கண்ட பெருமானே!

வறுமை எனக்குப் பெருமை
என்றுரைத்த கோமானே!

பொறுமையின் பொக்கிஷமாய்
விளங்கிய பூமானே..!

கியாமத்து என்னும் மறுமை நாளிலே...
ஆதரவாய் அடைக்கலமாய்...
உம்மத்தை எல்லாம் அரவணைத்து காப்பாற்றும்
அன்பு உள்ளமே..!

உம்மி நபியா நீங்கள்..?
தாங்கள் அல்லவா உலக பல்கலைக்கழகம்!

பலகற்ற மேதைகளும் பயின்று வரும்
புத்தகமல்லவா நீங்கள்...?!

மாபெரும் தத்துவங்களை இந்த உலகிற்கு
வாரி வழங்கிய தங்களை...
கல்லாநபி என்று எப்படி உரைப்பது..?

நாயகமே! தாங்கள் பிறந்தபோது...
கிஸ்ரா மன்னனின் கோட்டை மட்டுமல்ல
இறுகிப்போன மனக் கோட்டைகளும் சரிந்தன!

பஸ்ரா மாளிகைகள் மட்டுமல்ல
பாவப்பட்ட மனங்களும் இலங்கி நின்றன!

பாரசீகத்தில் பொங்கிய நெருப்பு
தங்கள் ஒளிமதி கண்டு சாந்தமானது!



சமாவத் ஓடை உங்கள் வரவால்
ஒடுங்கிப் போனது!

தாங்கள் மண்ணில் மலர்ந்தபோது
பாலை மண்ணே மணத்தது!

தங்கள் பிறப்பால் முழுமனித வர்க்கமே
மாண்புறச் செய்தீர்கள்!

ஏந்தலே! உங்கள் வரவால்தான்
எங்கள் பூட்டப்பட்ட மனக்கதவுகள் திறக்கப்பட்டது!

பெண்வர்க்கத்தை மண்தோண்டி புதைத்த சமூகத்தின்
மனங்களில் அன்பெனும் விதையை விதைத்தவர் நீங்கள்!

எத்தனை கொடுமைகள்.
எத்தனை கஷ்டங்கள்...
அத்தனையும் தாங்கள் தாங்கியதால் தானோ
பொறுமைகூட உங்களிடம் பொறுமை கற்றது!

கருணை நபியே!
கவலைகள் உள்ளத்தைத் தாக்கும் பொழுது
தாங்கள் நினைவுகள்தானே...
எங்கள் மனக்காயங்களை சுகப்படுத்துகின்றது!

எங்கள் ஆன்மாவின் அருமருந்தே!
கண்ணீர் பெருக.
நெஞ்சம் விம்ப.
என் சங்கையான சலவாத்தையும்...
பண்பான சலாமையும்...
உங்கள் காலடியில் சமர்ப்பிக்கின்றேன்...
யா றஸூலல்லாஹ்!!!

(ஷர்மிலா காதிர்)

## ஆசைதான்! பேராசைதான்!!

வைகறைப் பொழுதில் விடியும்...
ஒளிமயமான உம் முகத்தை...
பார்க்க ஆசைதான் நாயகமே! பேராசைதான்!!

மேனியில் தவழும்...
ஆடையின் அழகை...
ரசிக்க ஆசைதான் நாயகமே! பேராசைதான்!!

கண்களில் படர்ந்திருக்கும்...
கண்ணீரை உற்று நோக்க...
ஆசைதான் நாயகமே! பேராசைதான்!!

பணிவான நடையின்...
அழகை நேரில் காண...
ஆசைதான் நாயகமே! பேராசைதான்!!

இன்னிசை குரலை...
ஒரு தரமேனும் என் காதோரம் கேட்க...
ஆசைதான் நாயகமே! பேராசைதான்!!

கனிவோடு உங்களை...
நான் கரம்பற்ற...
ஆசைதான் நாயகமே! பேராசைதான்!!

உம்மைப் பார்க்கும் கண்கள் பறிபோகாது...
உம்மைத் தொடும் அங்கங்கள் செயலிழக்காது...
உம்மைப் பாடும் நாவு சுவை இழக்காது...
மொத்தத்தில் உம்மை விரும்பும் உள்ளம்...
என்றும் இறக்காது நாயகமே...!
யா றஸூலல்லாஹ்!!

(அப்சுர் ரஷீத் - றப்பானிய்யஹ் சிரேஷ்ட மாணவர்)



## நாயகத்திற்கோர் காவியம்...

நாயகமே! தங்களின் புகழ்கள்
என் கரங்கள் தொட்ட காவியமாகும்!
அதைக்கூற நான் ஓடி வந்தேன்...
தாங்கள் எனில் கலந்த ஓவியமாகும்!

நாயகமே! தங்களின் திரு வதனம்
நிலவொளியில் பூத்த தாரகையாகும்!
அதைக்காண நான் தேடி வந்தேன்...
தாங்கள் எனைக் கவர்ந்த சித்திரமாகும்!

நாயகமே! தங்களின் அருள் விழிகள்
மேகத்தில் மறைந்த சந்திரனாகும்!
வழிமீது விழிவைத்து வந்தேன்...
தாங்கள் என் முகம்நோக்கும் சூரியனாகும்!

நாயகமே! தங்களின் இரு புயங்கள்
கடல் வளர்த்த சிப்பிகளாகும்!
உமை நாடி புகழ்பாடி வந்தேன்...
தாங்கள் எனைக் காக்கும் கேடயமாகும்!

நாயகமே! தங்களின் அருள் இதழ்கள்
என் மனம் விரித்த தாமரையாகும்!
அருள்தேடி உமை நோக்கி வந்தேன்...
தாங்கள் என் மனம்வாழும் நாயகமாகும்!

நாயகமே! தங்களின் அருட் பற்கள்
மணிமாலை கோர்த்த முத்துக்களாகும்!
மலர் கொண்டு புகழ்சூட வந்தேன்...
தாங்கள் என் மதிவர்ண நடுமுத்தாகும்!

நாயகமே! தங்களின் பளிர் இதயம்
என் இறைவாழும் கோபுரமாகும்!
குகையென்று குணம் கொண்டு வந்தேன்...
தாங்கள் எனைக் காக்கும் அடைக்களமாகும்!

நாயகமே! தங்களின் அருட் கரங்கள்
என்றுமே மூடாத சிறகுகளாகும்!
சிறகுடைந்து உமைத் தேடுகின்றேன்...
தாங்கள் எனை ஆளும் முச்சுடராகும்!

நாயகமே! தங்களின் அருட் பாதங்கள்
என் சிரம்தொட்ட சின்னங்களாகும்!
சிரம் தாழ்த்தி தினம் நாடி வந்தேன்...
தாங்கள் என் வலி நீக்கும் ஔடதமாகும்!

நாயகமே! தங்களில் வீசிடும் மணம்
கஸ்தூரி விளையும் பொற் தளமாகும்!
புகழ்பாடி புகழ் சேர்க்க வந்தேன்...
உம் புகழ் ஞானப் பெருங் கடலாகும்!!

(காதிமுர் றஸூல்)

## கவிதை நூலகமே! யாறஸூலல்லாஹ்!!

அதிகம் பேசப்படாத நான் இன்று
உங்களால் அதிகம் பேசப்படுகிறேன் நாயகமே!

கவிதை நூலகமே! யா றஸூலல்லாஹ்!
தாங்களுக்குள் கொட்டிக் கிடக்கும் கவிதைகளை
துகள்களாக சேகரித்து...
எழுத்து வடிவில் வெளியிட்டதால்...
பாராட்டு எனக்கு இன்று யாறஸூலல்லாஹ்!!

உங்களை மட்டுமே சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் நாயகமே!
எனக்குள் நீங்களானவரே!
இனி நீங்களின்றி அசையாது
என் ஒவ்வொரு வினாடியும்
யா றஸூலல்லாஹ்!!

(தொகுத்தோன்)

**ஸல்லல்லாஹு அலா முஹம்மத்!**
**யா றப்பி ஸல்லி அலைஹி வஸல்லிம்!!**



## நன்றியுரை :

எல்லாப் புகழும் அகிலங்களின் இறைவன் அல்லாஹ் ஒருவனுக்கே! இறையருளும் ஈடேற்றமும் நபீ முஹம்மது முஸ்தபா (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தார், தோழர்கள், அவர்களைப் பின்பற்றும் அனைவருக்கும் உண்டாகட்டும்.

இந்நூலைத் தொகுக்கும் அளவிற்கு எனக்கு நல்லாசிகள் வழங்கி அருள் நெறிப்படுத்திய எனது சங்கைக்குரிய ஷெய்குனா மிஸ்பாஹீ நாயகம் (தால உம்றுஹு) அவர்களுக்கும், இந்நூல் மேலும் சிறந்தோங்க கண்மணி நபிகளாரின் புகழ்கூறும் அழகிய கவிதைகளை தந்துதவிய ஆஷிகே றஸூல் சகோதர உறவுகளுக்கும், மேலும் இந்நூல் சிறப்பாக வெளிவர பெரிதும் உதவிய மௌலவீ **MJ.** ஸுஹ்ரீ (றப்பானீ) அவர்களுக்கும், மற்றும் பணஉதவி செய்த அனைத்து ஆஷிகே றஸூல் நல்லுள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அருளாளனே! உனது அருளைக் கொண்டும், உனது ஹபீப் ஸெய்யிதுனா முஹம்மது முஸ்தபா (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பொருட்டைக் கொண்டும், உனது நபீமார்கள், வலீமார்களின் பொருட்டைக் கொண்டும் இவர்கள் அனைவர்களினதும் வாழ்நாளை பூரண ஆரோக்கியத்துடன் நீளமாக்கி வைப்பாயாக! இன்னும் ஆபத்துக்கள், நோய்களில் இருந்தும், எதிரிகள் நயவஞ்சகர்கள், சூழ்ச்சிக்காரர்கள், சூனியக்காரர்கள், வஹ்ஹாபிகளின் தீங்குகளிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பாயாக! மேலும் உனது ஹபீப் நாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் திருக்காட்சியை ஈருலகிலும் கொடுத்தருள் புரிவாயாக!

ஆமீன். யாறப்பல் ஆலமீன்!

**தொகுத்தோன்**